**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : 9

| | | | |
|---|---|---|---|
| Name: | வேல்முருகன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 to A5 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16.12.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருநெல்வேலி, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் உள்ளேன். கடந்த 20.10.2021 அன்று பணியில் இருந்தபோது தூத்துக்குடி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு குற்ற எண். 18/2021 வழக்கில் சம்பந்தப்பட்ட 15 காகித பொட்டலங்கள் சரியாக மூடி முத்திரையுடன் கனம் கூடுதல் மாவட்ட நீதிபதி, முதன்மை சிறப்பு நீதிமன்றம், NDPS ACT வழக்குகள் அவர்கள் கடிதத்துடன் தலைமைக்காவலர்-368-திரு.நாராயணன் என்பவர் மூலமாக பகுப்பாய்வுக்காக பெறப்பட்டது. அவை ஒவ்வொன்றிலும் உலர்ந்த நிலையில் பசுமை கலந்த பழுப்பு நிறமுள்ள சிறு இலைகளுடன் கூடிய கதிர்கள், விதைகள் மற்றும் நொறுங்கிய இலைகளுடன் கூடிய மாதிரிகளின் நிகர எடை தலா 25 கிராம் இருந்தது. அவைகளை தனித்தனியாக

பகுப்பாய்வு செய்ததில் கெனாபினாய்டு என்னும் வேதிப்பொருள் கண்டறியப்பட்டு கஞ்சா என ஆய்வறிக்கை தயார் செய்து 12.11.2021 அன்று தலைமைக்காவலர் -368-திரு.நாராயணன் என்பவர் மூலமாக மேற்கண்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். பகுப்பாய்விற்கு கஞ்சா மாதிரிகளை பகுப்பாய்வு செய்ய நீதிமன்றம் அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.27** ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.28** ஆகும்.

**<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்களது உயர் அதிகாரி Director of Forensic Science ஆகும். என்னுடைய உயர் அதிகாரி துணை இயக்குநர் ஆவார். எங்கள் அலுவலகத்தில் மாதிரிகளை பெற்றுக்கொள்ளவும், அனுப்புவதற்கும் தனி அலுவலர் உள்ளார் என்றால் சரிதான். இதுபோன்ற வழக்குகளில் சோதனை செய்து அதற்குரிய கடிதங்களை துணை இயக்குநர் கையொப்பம் இடவேண்டும் என்றால் சரிதான். தடய அறிவியல் துறையில் இருந்து நாங்கள் அனுப்பிய கடிதத்தில் கையெப்பமிட்டுள்ள துணை இயக்குநரை வழக்கு புலனாய்வு அதிகாரி விசாரித்தாரா என்றால் எனக்கு தெரியாது. துணை இயக்குநர் இருக்கும்போது எங்கள் சோதனைக்கடிதத்தில் கையெழுத்திடும் அதிகாரம் அவரிடம் இருக்கும்பட்சத்தில் அவரே நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல தகுதியுடையவர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்களுடைய பகுப்பாய்வு அறிக்கையில் Thin laiyer chromatography என்பது சரியான விளக்கமாகும். நாங்கள் ஆய்வு செய்யும் கெனாபிய்டுகளை 3 சதவீதத்திற்கும் குறைவாக THC குறைவாக இருக்கும் பட்சத்தில் அது மனநலத்தை பாதிக்கும் மருந்துகளில் வகைப்படுத்தமாட்டோம் என்றால் அதை சொல்ல இயலாது. கெனாபிய்டுகளை சோதனை செய்ய பல்வேறு முறைகள் உள்ளது. முடிவு அறகிக்கையில் புற்சோதனையில் என்ன அறிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டது

என்று குறிப்பிடவில்லை. அதைபோலவே நுண்உறுப்பறிக்கை மூலமாகவும் வேதியல் நிறப்பரிசோதனை மூலமாகவும் TLC முறைமூலமாகவும் என்னென்ன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது என்பது எனது அறிக்கையில் காணப்படவில்லை என்றால் சரிதான். மாதிரிகளை நாங்கள் பெறும்போது வழக்கு எந்த நீதிமன்றத்தில் இருக்கிறதோ அந்த நீதிமன்றத்தின் முத்திரையுடன் தான் பெறுவோம் என்றால் சரிதான். கெனாபிய்டுகளில் கஞ்சா, மாரிகுணா, கேசஸ், சாராஸ் என பல்வகைப்படுத்தலாம் என்றால் சரிதான். என்னுடைய பணி ஆய்வகப்பணி மட்டும்தான். நாங்கள் ஆய்வகத்தில் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையை துணை இயக்குநருக்கு அனுப்புவோம். ஆய்வகத்தில் என்னென்ன ஆய்வுகள் மேற்கொண்டோம் என்பதற்கு ஒரு அறிக்கை தயார் செய்து துணை இயக்குநருக்கு அனுப்பி வைப்போம் என்றால் சரிதான். ஆய்வறிக்கையில் எதுபோன்ற வேதியியல் பரிசோதனை செய்தோம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கஞ்சா என்று சொல்வதில் 15 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை செயல்படக்கூடிய மூலக்கூறுகள் இருக்கவேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. கஞ்சா என்று சொல்வது பூவின் நுனிப்பாகமாக இருக்கக்கூடிய பெண்இனத்தை சார்ந்த தாவரவகையாகும் என்றால் சரிதான். நாங்கள் கொடுத்த அறிக்கையில் பூவின் நுனிபாகம் கொண்ட பெண்இனத்தை சார்ந்த தாவரவகை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட கஞ்சா போதை தரக்கூடியதா இல்லையா என்பதை மருத்துவர் தான் சொல்லமுடியும் என்று சொன்னால் சரிதான். நாங்கள் கொடுக்கும் ஆய்வறிக்கையை மருத்துவரிடம் கொண்டுபோய் கொடுத்து அதற்கு தனி சான்றிதழ் பெறுவார்கள் என்றால் சரிதான். பகுப்பாய்வுக்கு கொடுக்கப்பட்ட பொருட்களில் உலர்ந்த இலைகளும், காய்களும், விதைகளும் இருந்தால் அதை பாங்க் என்று வகைப்படுத்துவோம்

என்றால் சரிதான். இதுஅவ்வாறு இல்லை என்பதால் இதை கஞ்சா என்று வகைப்படுத்தி அறிக்கை கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் எல்.எஸ்.டி எத்தனை சதவீதம் என்றோ சைலோசைடீன் எத்தனை சதவீதம் என்றோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கஞ்சா துரிதமாக எங்களுக்கு அனுப்பிவைக்கும் பட்சத்தில் எந்த நிலையில் அவர்கள் கைப்பற்றினார்கள் என்பதை சொல்லமுடியும். காலம் தாழ்த்தும்போது அதுவே உலர்ந்துவிடும் என்றால் சரிதான். எங்களுடைய ஆய்வகத்தில் இருந்து சோதனைக்குபின்பு மீதம் இருந்த 10 கிராம் போதைப்பொருள் கொண்ட 15 உறைகள் மட்டும் தான் திருப்பி அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற முத்திரை இல்லாத மாதிரிகளை திருப்பி அனுப்பி விடுவோம், சோதனை செய்யமாட்டோம் என்றால் சரிதான். இதுசம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்திருக்கிறாரா என்றால் விசாரித்தார் ஆனால் தேதி ஞாபகம் இல்லை. நாங்கள் ஆய்வறிக்கையை கொடுத்து அனுப்பியபிறகுதான் என்னை அலுவலகத்தில் வைத்து விசாரித்தார். என்னை விசாரித்தபோது துணை இயக்குநர், டெஸ்பேட்ச் அலுவலர் அனைவரும் அலுவலகத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களை அன்று ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்கொண்ட பரிசோதனைகள் எதன்காரணமாக இந்த சம்பந்தப்பட்ட மாதிரிகள் கஞ்சாவைச்சேர்ந்தது என்று கொடுத்தேன் என்பதற்காக நான் தயார் செய்த அறிக்கை எங்கள் அலுவலகத்தில் தான் இருக்கிறது என்றால் சரிதான். அதைபார்த்தால்தான் நான் முடிவுக்கு வந்த விபரம் தெரியும் என்றால் சரிதான். இந்த ஆய்வறிக்கையை பற்றி நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கக்கூடிய அதிகாரமும், தகுதியும் உதவி இயக்குநருக்குத்தான் இருக்கிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் அலுவலகத்தில் போதைப்பொருள் சம்பந்தமாக அனைத்து நடவடிக்கையையும்

சொல்லக்கூடிய நபர் துணை இயக்குநர் என்றால் சரிதான். அவரை விசாரிக்காமல் என்னை விசாரிப்பதன்மூலம் முழுவிபரமும் தெரியவராது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வேண்டுகோள் கடிதம் வரும்போதே வழக்கின் சுருக்கம் பெறப்படும் என்றால் சரிதான். அந்த வழக்கின் சுருக்கத்தை நான் படித்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஆய்வக விதிப்படி சம்பந்தப்பட்ட மாதிரிகளில் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளாமல் எனக்கு அளிக்கப்பட்ட வழக்கின் சுருக்கத்தை மனதில் வைத்து இந்த ஆய்வறிக்கையை தயார் செய்து அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு அனுப்பப்பட்ட மாதிரிகள் யாவும் போதை தரக்கூடிய கஞ்சா இனத்தை சேர்ந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த போதைப்பொருள் குறித்து மூன்று நாட்கள் ஆய்வு மேற்கொண்டோம் என்றால் சரிதான். எந்தெந்த நாட்களில் ஆய்வுகள் மேற்கொண்டோம் என்று இல்லை இறுதியான நான் 28.10.2021 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மாதிரிகள் என்னால் 20.10.2021 அன்று பெற்றப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.27 ன்படி நீதிமன்றத்தால் 18.10.2021 அன்று அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். ஆய்வுக்கு பெறப்படக்கூடிய மாதிரிகளை எந்தவிதத்தில் பெறப்பட்டது என்பது குறித்து குறித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.28 அறிக்கையில் காகித உறையினுள் இருந்த பாலிதீன் கவருக்குள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரிகளின் மேல் எதிரிகளின் கையொப்பம் இருந்ததாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.28 ல் காகித உறையின் நிறம் குறித்து குறிப்புகள் எதுவும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாதிரியின் விபரங்கள் என்ற காலத்தில் சீல்கள் குறித்த விபரங்கள் எதுவும் குறிப்பிடப்பவில்லை என்றால் சரிதான். நான் மனதை ஒருமுகப்படுத்தி ஆய்வு மேற்கொள்ளாத

காரணத்தாலும், காவல்துறையினரின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த சான்று சட்டவிதிகளுக்குட்பட்டதல்ல என்பதால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்திலிருந்து பகுப்பாய்வுக்கான வேண்டுகோள் கடிதத்துடன், காவல்நிலைய வேண்டுகோள் கடிதம், வழக்கின் சரித்திரம், முதல் தகவல் அறிக்கைகள் போன்ற ஆவணங்கள் உடனினைத்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையில் ஆய்வுக்கு பெறப்பட்ட மாதிரி பொட்டலங்களின் மீது எதிரிகளின் பெயர்கள் எதுவும் குறிப்பிட்டிருந்ததாக அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல்நிலைய வேண்டுகோள் கடிதத்தில் காவல்நிலைய மாதிரி முத்திரைகள் பதித்து அனுப்பபடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு காவல்நிலைய மாதிரி முத்திரை பதித்து அனுப்பப்பட்டிருந்தால் மட்டுமே ஆய்வுக்கு பெறப்பட்ட மாதிரி பொட்டலத்தின் மீது காவல்நிலைய மாதிரி முத்திரை இருந்ததா , இல்லையா என்று ஒப்பீடு செய்யமுடியும் என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையில் ஆய்வுக்கு பெறப்பட்ட மாதிரி பொட்டலங்களின் மீது காவல்நிலைய மாதிரி முத்திரை இடப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆய்வுகள் ஒவ்வொன்றும் எந்தெந்த தேதியில் செய்யப்பட்டது ஒவ்வொரு ஆய்வுமுறைக்கும் எத்தனை கிராம் எடையுள்ள பொருட்கள் பயன்படுத்தப்பட்டன அதன் முடிவுகள் என்ன என்பது பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கௌபினாய்டு வகைகளில் சுமார் நூற்றிற்கும் மேற்பட்ட வகைகள் உள்ளது என்றால் சரிதான். ஆய்வறிக்கையில் எந்தவகை கௌபினாய்டு என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை

முழுவிபரங்கள் அடங்கிய பகுப்பாய்வு அறிக்கை என்று சொன்னால் சரியல்ல.

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தமதாக ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது.

**<u>5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்குவிசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**<u>மறுவிசாரணை; இல்லை.</u>**